ALL INDIA RADIO - TIRUCHIRAPPALLI

மாநிலச் செய்திகள்

நேரம்: 01.45 pm

**02.02.2023**

தலைப்புச்செய்திகள்

1.அதானி குழு மீதான ஆய்வறிக்கை தொடர்பான பிரச்சினைகளில் அமளி காரணமாக, நாடாளுமன்ற இரு அவைகளும்,இன்று பிற்பகல் 2 மணிவரை ஒத்தி வைக்கப்பட்டன.

2.தூய்மையான, பசுமையான சமூகத்தை உருவாக்க ஜி-20 உறுப்பு நாடுகள் செயலாற்ற வேண்டும் என்று,மத்திய ஆயுஷ்துறை அமைச்சர் திரு.சர்பானந்த சோனோவால் அழைப்பு விடுத்திருக்கிறார்.

3.மக்கள் பணிகளை சிறப்பாக முன்னெடுத்துச் செல்லவே கள ஆய்வு பணிகள் தொடங்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

4. ராமநாதபுரம், திருநெல்வேலி தூத்துக்குடி மாவட்டங்களில் இன்று கன, மிக கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

5. தென்னாப்பிரிக்காவில் நடைபெறும் மகளிர் முத்தரப்பு 20-20 கிரிக்கெட் இறுதிப்போட்டியில் இந்தியா இன்றுமாலை ஆறரை மணிக்கு தென்னாப்பிரிக்காவை எதிர்கொள்கிறது.

நாடாளுமன்றம்

அதானி குழு மீதான ஹிண்டன்பர்க் ஆய்வறிக்கை மற்றும் பங்குச்சந்தையில் இதன் தாக்கம் உள்ளிட்ட பிரச்சினைகளில் அமளி காரணமாக, நாடாளுமன்ற இரு அவைகளும்,இன்று பிற்பகல் 2 மணிவரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

மக்களவை இன்று கூடியதும், காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ், திமுக உள்ளிட்ட எதிர்கட்சிகள், அவையின் மையப்பகுதியில் குழுமி அதானி பிரச்சினையில் விசாரணை கோரி குரல் எழுப்பினார்கள்.

உறுப்பினர்களை தத்தம் இருக்கைகளுக்கு செல்ல மக்களவைத்தலைவர் திரு. ஓம்.பிர்லா கேட்டுக்கொண்ட போதிலும், யாரும் அதற்கு செவிமடுக்காமல், தொடர் கூச்சல் குழப்பங்களில் ஈடுபட்டதால், மக்களவை பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

மாநிலங்களவையிலும் இதே பிரச்சினை எதிரொலித்தது.

எல்.ஐ.சி. பொதுத்துறை வங்கிகள், நிதித்துறை நிறுவனங்கள் சந்தை மதிப்பை இழந்தது தொடர்பான ஒத்திவைப்பு நோட்டீஸ் மீதான விவாதத்ததிற்கு அவைத்தலைவர் திரு.ஜக்தீப் தன்கர் அனுமதி மறுத்ததை அடுத்து, காங்கிரஸ், திரிணாமுல், திமுக, ஆம் ஆத்மி, சமாஜ்வாடி, இடதுசாரி உள்ளிட்ட எதிர்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால், மாநிலங்களவையும் பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

பிரதமர்

முன்னதாக,பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையில் புதுதில்லியில் இன்று நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில்,நாடாளுமன்றத்தில், மத்திய அரசின் மேற்கொள்ள வேண்டிய நிலைப்பாடு குறித்து விவாதிக்கப்பட்டது.

அமைச்சர்கள் திரு.அமீத்ஷா, திரு.ராஜ்நாத் சிங், திரு.அனுராக்சிங் தாக்கூர், திருமதி.நிர்மலா சீத்தாராமன் உள்ளிட்டோர்இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

இதனிடையே,நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு.பிரல்ஹாத் ஜோஷி,இரு அவைகளும் சுமூகமாக நடைபெற எதிர்கட்சிகள் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

சர்பானந்த சோனோவால்

ஜி-20 உறுப்பு நாடுகள் நீடித்த வாழ்க்கை முறையை ஒரு மாபெரும் இயக்கமாக ஒருங்கிணைந்து முன்னெடுத்துச்செல்ல மத்திய ஆயுஷ்துறை அமைச்சர் திரு.சர்பானந்த சோனோவால் அழைப்பு விடுத்திருக்கிறார்.

அஸ்ஸாம் மாநிலம் குஹாட்டியில் ஜி-20 நீடித்த நிதி கட்டமைப்பு பணிக்குழுக் கூட்டத்தில் இன்று துவக்க உரையாற்றிய அவர், தூய்மையான பசுமை சமூகத்தை உருவாக்க உலக நாடுகள் செயலாற்ற வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

கரியமில வாயு வெளியேற்றத்தை குறைப்பதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

தேசிய வளர்ச்சியை கருத்தில்கொண்டு, இந்திய நாடு நீடித்த மேம்பாட்டை ஊக்குவிப்பதாக அவர் எடுத்துரைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், இந்தியாவின் ஜி-20 தலைமைத்துவம், நம்நாட்டின் கலாச்சார பெருமைகளை உலகத்திற்கு பறைசாற்ற ஒரு வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது என்று பெருமிதம் தெரிவித்தார்.

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள, நீடித்த நிதி கட்டமைப்பு சவால்களை கண்டறிந்து, வளர்ச்சி மற்றும் உலகளாவிய மக்களின் நலனுக்கான வழிமுறைகள் ஆராயப்படும் என்றார்.

இந்த கூட்டத்தின் மூலம், நற்பணிகளுக்கான நீடித்த நிதி கட்டமைப்பை எவ்வாறு கையாள்வது என்பது குறித்த வழிமுறைகள் கண்டறியப்படும் என்றும் குறிப்பிட்டார்.

ஜி-20 உறுப்பு நாடுகளின் நூற்றுக்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் இந்த 2 நாள் கூட்டத்தில் பங்கேற்றுள்ளனர்.

🕮🕮🕮🕮🕮🕮

ஜி-20

சென்னையில்ஜி-20 கல்வி பணிக்குழுவின் நிறைவுநாளான இன்று, இருதரப்பு கல்வி தொடர்பான விரிவான விவாதங்கள் இடம்பெற்றன.

இக்கூட்டத்தின் பிற்பகல் அமர்வில், ஜி-20 கல்வி அறிக்கை குறித்து விவாதிக்கப்படுகிறது.

முன்னதாக இக்கூட்டத்தில் பங்கேற்ற ஜி-20 உறுப்பினர்கள், இந்தியாவின் வளமான பாரம்பரிய கலாச்சாரத்தை அறிந்துகொள்ளும் வகையில்,வீரமங்கை வேலு நாச்சியார் வாழ்க்கை வரலாற்றை சித்தரிக்கும் 40 நிமிட காட்சிப்படத்தை வெளிநாட்டு பிரதிநிதிகள் ஆர்வத்துடன் பார்வையிட்டனர்.

இந்திய கலாச்சார குழுவும், தமிழ்நாடு சுற்றுலா கழகமும் இணைந்து இந்நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தது.

முன்னதாக நேற்று நடைபெற்ற கூட்டத்தில், பஞ்சபூதங்கள் குறித்த விளக்கப் படமும் இடம்பெற்றது.

ஜி-20 நாடுகளின் பிரதிநிதிகள், மாமல்லபுரத்தில் உள்ள யுனெஸ்கோ பாரம்பரிய முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலா பகுதிகளுக்கு அழைத்து செல்லப்பட்டனர்.

இந்நிகழ்ச்சியில் நம் மாநிலத்தின் நாட்டுப்புற கலைகளை வெளிநாட்டு பிரதிநிதிகள் கண்டுகளித்தனர்.

இதனிடையே,ஜி-20 வேலைவாய்ப்பு பணிக்குழுக் கூட்டம் ராஜஸ்தான் மாநிலம்,ஜோத்பூரில் இன்று நடைபெறுகிறது.

🕮🕮🕮🕮🕮🕮

நிர்மலா சீத்தாராமன்

மத்திய நிதியமைச்சர் திருமதி.நிர்மலா சீத்தாராமன், இந்திய வர்த்தக தொழில் கூட்டமைப்பினருடன் இன்று புதுதில்லியில் கலந்துரையாடுகிறார்.

பட்ஜெட்டிற்கு பிந்தைய இக்கூட்டத்தில், நிதிநிலை அறிக்கையில் இடம்பெற்றுள்ள அறிவிப்புகள், அதனால் ஏற்படும் பொருளாதார தாக்கங்கள் உள்ளிட்டவை குறித்து எடுத்துரைக்கிறார்.

இதனிடையே, மத்திய நிதிநிலை அறிக்கைக்கு பல்வேறு தரப்பினர் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

மருந்தியல் துறைக்கு கடந்த பட்ஜெட்டை விட பதினொன்றரை மடங்கு நிதி ஒதுக்கி இருப்பதாக, மத்திய ரசாயன மற்றும் உரத்துறை அமைச்சர் டாக்டர்.மன்சுக் மாண்டவ்யா மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

அமிர்தகால பட்ஜெட், தொழில்துறையை மிக பெரிய உயரங்களுக்கு கொண்டு செல்லும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

🕮🕮🕮🕮🕮🕮

மாநிலங்கள் தேர்தல்

திரிபுரா மாநிலத்தில் மொத்தமுள்ள 60 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு வரும் 16-ம் தேதி நடைபெற உள்ள தேர்தலுக்கான வேட்புமனுக்களை திரும்பப்பெற இன்று கடைசி நாளாகும்.

இதனிடையே,நாகாலாந்து, மேகாலயா மாநிலங்களில் தலா 60 சட்டப்பேரவை தொகுதிகளுக்குவரும்27-ம் தேதி வாக்குப்பதிவு நடைபெற உள்ள நிலையில்,இவ்விரு மாநிலங்களுக்கான முதல் வேட்பாளர் பட்டியலை பிஜேபி இன்று வெளியிட்டது.

இதன்படி, நாகாலாந்தில் 20 பேர் கொண்ட பட்டியலையும், மேகாலயாவில் 60 பேர் கொண்ட பட்டியலையும் கட்சி இன்று வெளியிட்டுள்ளது.

இவ்விரு மாநிலங்களிலும் வேட்புமனு தாக்கல் செய்ய வரும் 7-ம் தேதி கடைசி நாளாகும்.

🕮🕮🕮🕮🕮🕮

முதலமைச்சர்

மக்கள் பணிகளை சிறப்பாக முன்னெடுத்துச் செல்லவே கள ஆய்வு பணிகள் தொடங்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

வேலூர் மாவட்ட ஆட்சியரகத்தில் கள ஆய்வு ஆலோசனைக் கூட்டத்தில் இன்று உரையாற்றிய அவர், அதிகாரிகளும் மக்கள் நலனுக்கு முன்னுரிமை கொடுத்து செயலாற்ற வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

திட்டப்பணிகளை தொடர்ந்துகண்காணிக்க வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

குறிப்பிட்ட காலத்திற்குள் திட்டங்கள் முடிக்கப்பட வேண்டும் என்றும் முதலமைச்சர் கூறினார்.

முன்னதாக,கள ஆய்வில் முதலமைச்சர் என்னும் திட்டத்தின்கீழ்,வேலூர், திருவண்ணாமலை, ராணிப்பேட்டை, திருப்பத்தூர் மாவட்டங்களில் செயல்படுத்தப்படும் அரசின் திட்டங்கள் குறித்து வேலூர் மாவட்ட ஆட்சியரகத்தில் ஆய்வு மேற்கொண்டார்.

இதுகுறித்து எமது வேலூர் செய்தியாளர் தெரிவிக்கையில்,

----- வாய்ஸ் ------

மழை

வங்ககடலில் நிலவிய காற்றழுத்த தாழ்வுமண்டலம் இன்றுகாலை இலங்கையில் திரிகோணமலைக்கும் - மட்டகலப்பிற்கும் இடையே கரையை கடந்தது.

இது, தென்மேற்கு திசையில் நகர்ந்து, குமரிக்கடல் மற்றும் அதனையொட்டிய மன்னார் வளைகுடா பகுதிகளில் நாளை காலை நிலை கொள்ளும் என்று சென்னை வானிலை ஆய்வுமைத்தின் இயக்குநர் திரு.செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

---- வாய்ஸ் ----

இதன்காரணமாக, ராமநாதபுரம், திருநெல்வேலி தூத்துக்குடி மாவட்டங்களில் இன்று கன, மிக கனமழையும்,

தென்காசி, சிவகங்கை, புதுக்கோட்டை, டெல்டா மாவட்டங்களில் கனமழையும் பெய்யக்கூடும் என்றும் இம்மையம் தெரிவித்துள்ளது.

தென்மேற்கு வங்கக்கடல், இலங்கை கடலோரம், தமிழக கடலோர பகுதிகளில் சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்பதால், மீனவர்கள் இதற்குட்பட்ட பகுதிகளில் நாளை மறுநாள்வரை செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

தென் தமிழக கடலோர மாவட்டங்களில் பலத்த தரைக்காற்று அவ்வப்போது வீசக்கூடும் என்றும் இம்மையம் கூறியுள்ளது.

மழை தொடர்ச்சி

பாம்பன்,தூத்துக்குடி வ.உ.சி. துறைமுகங்களில் 3-ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டும்,

நாகை, கடலூர் துறைமுகங்களில் ஒன்றாம் எண் புயல் எச்சரிக்கை கூண்டும் ஏற்றப்பட்டுள்ளது.

மன்னார் வளைகுடா, பாக் ஜலசந்தி கடல்பகுதிகளில் பலத்த காற்றுடன், கடல் சீற்றத்துடன் காணப்படுவதால், மீனவர்கள் 3-வது நாளாக இன்றும் கடலுக்குள் மீன்பிடிக்க செல்லவில்லை.

தூத்துக்குடி மாவட்டத்திலும் மீனவர்கள் 3-வது நாளாக இன்று கடலுக்குள் மீன்பிடிக்க செல்லவில்லை.

இருவரி

சிவகங்கை மாவட்டத்தில், ஆதி திராவிட பழங்குடியின வகுப்பை சேர்ந்த 10-ம் வகுப்பு படித்த மாணாக்கர் தாட்கோ அலுவலகம் மூலம், அழகு சாதனவியல், சிகை அலங்கார பயிற்சி பெற விண்ணப்பிக்கலாம் என, ஆட்சித்தலைவர் திரு.மதுசூதன ரெட்டி தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்டத்தில், வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதார் எண்ணை இணைப்பதற்கான சிறப்பு முகாம் வரும் 4, 5 தேதிகளில் நடைபெற உள்ளதாக, மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ் தெரிவித்துள்ளார்.

தமிழகம், கேரளம் கர்நாடக மாநிலங்களுக்கு வனப்பகுதியில், கோடைக்கால காட்டுத்தீ தடுப்பு நடவடிக்கைகள் குறித்த முத்தரப்பு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் முதுமலை புலிகள் காப்பகத்தில் இன்று நடைபெற்றது.

மாநில வனத்துறை அதிகாரிகள் இதில் பங்கேற்றனர்.

📖📖📖📖📖📖

இருவரி- 1

உலகஈர நிலங்கள் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

ஈர நிலங்களை மீட்டெடுக்கும் தருணம் இது என்பதே இந்த ஆண்டின் கருப்பொருளாகும்.

இத்தினத்தையொட்டி, கடலூர் மாவட்டம், பிச்சாவரம் பகுதியில அலையாத்தி காடுகளை பாதுகாப்பதன் அவசியம் குறித்து பள்ளி கல்லூரி மாணாக்கர் பங்கேற்ற விழிப்புணர்வு ஊர்வலங்கள் இன்று நடைபெற்றன.

திருவாரூர் மாவட்டம், வடுவூர், முத்துப்பேட்டை, உதய மார்த்தாண்டபுரம் உள்ளிட்ட பகுதிகளில் 2 லட்சம் பறவைகள் இருப்பதாக பறவைகள் கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது.

அலையாத்தி காடுகளில் வெளிநாடுகளிலிருந்து ஆயிரக்கணக்கான பிளமிங்கோ பறவைகள் முகாமிட்டுள்ளன.

நாமக்கல் மாவட்டத்தில் வனத்துறையினர் மேற்கொண்ட கணக்கெடுப்பின் போது,38 புதிய வகை நீர் பறவைகள் கண்டறியப்பட்டுள்ளது.

மொத்தம் 18 ஏரிகளில் 110 வகையான 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பறவைகள் இருப்பது தெரிய வந்துள்ளது.

📖📖📖📖📖📖

நாமக்கல் வாய்ஸ்

நாமக்கல் மாவட்டத்தில் வெள்ளிக்கிழமைதோறும் முகவர்களும், வர்த்தகர்களும், இறக்குமதியாளர்களும், பருப்பு வகைகளின் இருப்பை இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா சிங் அறிவுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

---- வாய்ஸ் -----

📖📖📖📖📖📖

கோவில்

திருச்சி ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதர் சுவாமி திருக்கோவில் தைத்தேர் திருவிழாவின் முக்கிய நிகழ்வான தைத்தேரோட்டம் நாளை நடைபெறுகிறது.

தேர்த்திருவிழாவின் 8-ம் திருநாளான இன்றுமாலை நம்பெருமாள் குதிரை வாகனத்தில் வையாளி கண்டருள்கிறார்.

---

முத்தரப்பு 20-20 கிரிக்கெட்

தென்னாப்பிரிக்காவில் நடைபெறும் மகளிர் முத்தரப்பு 20-20 கிரிக்கெட் இறுதிப்போட்டியில் இந்தியா இன்றுமாலை ஆறரை மணிக்கு தென்னாப்பிரிக்காவை எதிர்கொள்கிறது.

---

பேட்மிண்டன்

தாய்லாந்து மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இன்று, இந்தியாவின் சாய் பிரனீத் - தென்கொரியாவின் ஜியோனை எதிர்கொள்கிறார்.

முன்னதாக இன்று நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில்,கிரண் ஜார்ஜ் - ஹாங்காங்கின் லீ ச்யூக்-யிடம் தோல்வியடைந்தார்.

---

டெஸ்ட் கிரிக்கெட்

இந்தியா – ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையேயான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி நாக்பூரில் வரும் 9-ம் தேதி தொடங்குகிறது.

இரு அணிகளுக்கு இடையே 4 டெஸ்ட் போட்டிகளும், 3 ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளும் நடைபெற உள்ளன.

---

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

---